சுற்றுநிருபம் 07/2015(1)

கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு மாகாணம்,
18/9 வைமன் வீதி,
நல்லூர்.
26.04.2016

வடக்கு மாகாணத்திலுள்ள சகல கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் சமாசங்களின் தலைவர்களுக்கும்,

# கூட்டுறவுப் பணியாளர்களுக்கெதிரான ஒழுக்காற்று நடவடிக்கையைத் துரிதப்படுத்தல்

மேற்போந்த சுற்றறிக்கையின் உட்பிரிவுகள் 5:2 மற்றும் 8:5ஆகியன இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாக பின்வருமாறு திருத்தியமைக்கப்பட்ட உட்பிரிவுகள் பிரதியீடு செய்யப்படு கின்றன.

5.2 ஒழுக்காற்று விசாரணையை அதிகபட்சம் ஒரு வருடத்தினுள் முடிவுறுத்தி ஒழுக்காற்றுக் கட்டளையை வழங்குவதற்கு ஒழுக்காற்று அதிகாரி வேண்டிய நடவடிக்கை எடுத்தல் வேண்டும். குற்றம் சாட்டப்பட்ட அலுவலரின் தாமதத்தால் விசாரணை தாமதப்படும் சந்தர்ப்பத்தைத் தவிர வேறு ஏதேனுமொரு விடயத்தால் அவ்வாறு விசாரணையை முடிவுறுத்தி ஒழுக்காற்றுக் கட்டளை வழங்க ஒரு வருடத்தின் மேல் காலதாமதம் ஏற்படுமாயின் குற்றம் சாட்டப்பட்ட பணியாளர் வேலை இடைநிறுத்தத்திற்கு ஆளாகியுமிருப்பின் அவரை மீளச் சேவையில் அமர்த்தி அன்று தொடக்கம் சம்பளம் செலுத்த வேண்டும். அதுவரை செலுத்தப்படாத சம்பளங்கள் தொடர்பில் ஒழுக்காற்றுக் கட்டளை கிடைத்த பின் அதில் குறித்தவாறு செயற்படலாம்.

8.5 ஆணைக்குழுவுக்கு மேன் முறையீடொன்று கிடைக்கப் பெற்றதன் பின் மேன்முறையீட்டு விசாரணைக்குத் தேவைப்படும் தகவல்களை ஆணைக்குழு கோருகின்ற பட்சத்தில் சங்கமானது தாமதமின்றி குறித்த தகவல்களை வழங்குதல் வேண்டும்.

பொ.வாகீசன்
செயலாளர்
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு
வடக்கு மாகாணசபை

பொ.வாகீசன்,
செயலாளர்,
கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு,
வடக்கு மாகாண சபை,